# 57. சத்தியபோதகம்.

*கொம்பில்லாக்கலிவிருத்தம்.*

*பண் - கௌசிகம்.*

**த**ண்ண வன்கலை மானச் சனிப்புமால்
நண்ணு சாவு நமக்கணை யாமனீள்
கண்ணன் மாமரு கன்முரு கையனை
அண்ண வாரு மழுங்கல்விட் டன்பர்காள். 1

**நி**திக்கு லம்பல கூட்டினு நீணிலம்
மதிக்க மாளிகை கட்டினு மாயமாம்
துதிக்கு மன்பிலின் பீகுகன் றூத்துதி
அதிர்க்க வாரு மழுங்கல்விட் டன்பர்காள். 2

**தி**ணையி னாசை யவித்தருட் சீரடித்
துணையி னிற்பவர்க் கீறில் சுகந்தரும்
இணையி லாக்குக னுண்டவ னின்பினை
அணைய வாரு மழுங்கல்விட் டன்பர்காள். 3

**சி**றியர் மானத் தினம்பல காரமும்
வறிய கூழு நுகர்ந்து வருந்தலிர்
நறிய ஞானப் பிழம்பயி னாதனின்
பறிய வாரு மழுங்கல்விட் டன்பர்காள். 4

**வி**டங்க லன்னவுள் ளுள்ளவர் வீழ்கதி
அடங்கு வாரதை யாரரு ளாற்றலால்
தடங்கல் பண்ணித் தயாமுரு கையனின்
படங்க வாரு மழுங்கல்விட் டன்பர்காள். 5

2. ***அதிர்த்தல்*** = *சொல்லல் ;* ***பி-நிகண்டு*** *காண்க. அழுங்கல் = துன்பம்.*

## *கொம்பில்லா நிரோட்டகம் **

**தி**ல்லை நந்தியி னந்தனன் றிண்ணியன்
நல்ல கண்ணர்க ணாடயி லங்கையான்
அல்ல லில்லடி யாசையி னார்க்கலை
இல்ல ரந்தை யனந்தர்க ளில்லையால். 6

**க**திரை நாயகன் காசினி யாசினி
அதிர நீலண்ட சத்தை நடாத்திறை
கதிர றாநகைக் கானசை யார்க்கடல்
இதர நீட லிடர்த்தளை யில்லையால். 7

**க**ச்ச ணிந்த தனத்தியர் காட்டகல்
இச்சை நீத்தயி லீச னிறாக்கழல்
நச்ச ணைந்தநல் லார்க ளறாக்கலி
அச்ச நீங்கிநன் கண்ணிட லாணையால். 8

**நா**ட்டத் திற்கினி யான்சிகி நாதன்கால்
காட்டத் தக்ககண் ணாளன் கணக்கில்சீர்
நீட்டத் தக்ககை யானினை நீரர்கள்
ஈட்டத் தன்கதி ரைத்தளி யீசனால். 9

**அ**ந்தத் தானடி யார்க்கினி யானல்ல
கந்தத் தான்கதிர் காலணி யானகைத்
தந்தத் தானறை தாங்கிய தாரினான்
சந்தத் தானளூர் சாடயி னாதனால். 10

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 15ஆம் தேதி ஆதித்தவாரம்.

---

* *நிரோட்டகமாவது, இதழ்குவிக்கும் உயிரெழுத்தும் மெய்யெழுத்துந் தீண்டாமற்பாடுவது.*

*6.* ***அரந்தை*** = *துன்பம்.* ***அனந்தர்*** = *மயக்கம்.*